# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1952/5 - 2016 පෙබරවාරි මස 01 වැනි සඳුදා - 2016.02.01

*1952/5 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 01 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மத்திய மாகாண மாகாண சபை**

அறிவித்தல்

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய, (252 ஆவது அத்தியாயமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் 563 ஆவது அத்தியாயமான பொது மயானங்கள் மற்றும் தனியார் மயானங்கள் கட்டளைச் சட்டத்தின் 5 ஆவது பிரிவின் கீழ் மத்திய மாகாண உள்ளூராட்சி விடயப் பொறுப்பு அமைச்சர் சரத் ஏக்கநாயக்க ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ், கண்டி மாநகர சபை 2015, ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதி 8 (54) ஆம் இலக்க தீர்மானத்தின்படி பொது மயானம் ஒன்றென ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதும், கீழே அட்டவணை I இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளுக்குள் அமைந்துள்ளதுமான தொடம்வெல மயானம், இதன் பின்னர் கண்டி மாநகர சபைக்கு உரித்தான பொது மயானம் ஆகுமென இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

மேலும், மேற்குறித்த தொடம்வெல மயானத்தின் தகனம் மற்றும் அடக்கம் செய்யப்படும் இறப்புகள் உள்ளடங்கிய பிரதேசங்கள் இங்கு அட்டவணை - II இல் தரப்படுகின்றன.

சரத் ஏக்கநாயக்க,
முதலமைச்சரும், உள்ளூராட்சி விடயப்
பொறுப்பு அமைச்சரும்,
மத்திய மாகாணம்.

*2016, சனவரி 20.*

**அட்டவணை I**

இலங்கை நில அளவையாளர் திணைக்களத்தினால் 1991, ஓகத்து மாதம் 22 ஆந் திகதியன்று மேற்கொள்ளப்பட்ட அடிப்படைக் காணி உறுதி மஹ 3858 இனது துண்டு இலக்கம் 1 ஆகிய மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தின், கண்டி கங்கவட்ட கோறளைப் பிரதேச வருமான அலுவலர் பிரிவின், கண்டி மாநகர சபையின் 5 ஆம் இலக்க கண்டி தொடம்வெல பிரிவில், கண்டி தொடம்வெல கிராமம் அமைந்துள்ள எல்லைகள் :-

| | | |
|---|---|---|
| வடக்கு | : | தொடம்வெல ஒழுங்கையும் இந்தக் காணியின் எஞ்சிய பகுதியும் ; |
| கிழக்கு | : | இந்தக் காணியின் எஞ்சிய பகுதி ; |
| தெற்கு | : | இந்தக் காணியின் எஞ்சிய பகுதியும் பீல்லகாவ தோட்டமும் ; |
| மேற்கு | : | தொடம்வெல ஒழுங்கைக்குள் அமைந்துள்ள 0.1633 ஹெக்டேயார் பரப்பளவு கொண்டுள்ள காணித்துண்டு. |

அட்டவணை II

வடக்கு : மகாவலி கங்கையும் ஸ்ரீமத் குடா ரத்வத்த மாவத்தையும் ;

கிழக்கு : கண்டி, கட்டுகஸ்தோட்டை வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தான பாதையும், அஸ்கிரிய ஸ்ரீ சுமங்கல மாவத்தை, வட்டாரந்தன்னைப் பாதை, அனிவத்தைப் பாதை மற்றும் ஜோர்ஜ் ஈ த சில்வா மாவத்தையும் ;

மேற்கு : மகாவலி கங்கையும் கெற்றம்பே வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குரிய கன்னொருவ பாதையும் ;

தெற்கு : கண்டி பேராதனைப் பழைய பாதை.

*2- 445*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.